செய்தி வெளியீடு எண்: 312 நாள்: 13.6.2013

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள் வழங்கும் திட்டம் தமிழகத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளுக்கு வழங்கப்படவுள்ள விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி கிடங்கினையும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பழுதுபார்க்கும் மையத்தினையும், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி ஆகியோர் இன்று ( 13.6.2013 ) ஆய்வு செய்தனர்.

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் ஆய்வு செய்து தெரிவிக்கையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள் வழங்கும் பணி சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி 2011–2012 ஆம் ஆண்டில் 1,47,000மும், 2012–2013ஆம் ஆண்டில் 2,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 2,86,341 இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை அசோக்நகர் நடுநிலைப்பள்ளியில் அமைந்துள்ள கிடங்கில் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ள விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி பார்வையிடப்பட்டு, கிடங்குகளில் விலையில்லா பொருட்களை கவனமாக கையாள வேண்டும் என்றும், இரண்டு அடுக்குகள் மேல் பொருட்களை அடுக்க வேண்டாம் என அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து சென்னை, மேத்தா நகர் மற்றும் சிந்தாதிரிபேட்டையில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட பழுது பார்க்கும் மையங்கள் பார்வையிடப்பட்டு, பழுது பார்க்கும் மையங்களில் போதுமான உதிரி பாகங்கள் உள்ளனவா என்றும், பயனாளிகளின் நலன் கருதி ஒரு தொகுதிக்கு ஒரு பழுதுபார்க்கும் மையம் வீதம் 16 சட்டமன்ற தொகுதிகளுக்கு 16 பழுது பார்க்கும் மையங்களை உடனடியாக அமைக்க வேண்டும் என்றும், காலதாமதமின்றி உடனடியாக பழுதுபார்த்து பயனாளிகளிடம் விலையில்லா பொருட்களை ஒப்படைக்க வேண்டும் என சம்பந்தபட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது சென்னை மாநகராட்சி இணை ஆணையார் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கூடுதல் பதிவாளர் திருமதி வி. கலையரசி, இ.ஆ.ப., மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**